ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.11.30 |

# கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - ஒத்தோபர் 2023

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண், தொடர்ச்சியாக 20 மாத சுருக்கத்தின் பின்னர் 2023 ஒத்தோபரில் 50.0 கொண்ட நடுநிலையான அடிப்படை அளவினை எய்தியது.** இடைநிறுத்தப்பட்டிருந்த அரசாங்க நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் சில மாதகாலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீளத்தொடங்கப்பட்டன என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடப்பட்டனர். எவ்வாறாயினும், அநேகமான முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் அவற்றின் இறுதிக்கட்டங்களில் காணப்படுவதனால் தொழில்துறையானது குறைவாகக் கிடைக்கப்பெறுகின்ற பணி அளவுகளுடன் தொழிற்படுகின்றது.

அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒத்தோபரில் புதிய கட்டளைகள் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. அடுத்த ஆண்டின் முதலரைப்பகுதியில் தொடங்கப்படுவதற்கு அநேகமாக திட்டமிடப்பட்டிருந்த பாரிய விலைக்கோரல் வாய்ப்புக்களில் படிப்படியான அதிகரிப்பினை பல பதிலிறுப்பாளர்கள் அவதானித்திருந்தனர். தற்போதைய சூழ்நிலைகளின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்களுடன் கம்பனிகள் இயங்குவதனால் தொழில்நிலை சுருக்கமடைந்தே காணப்பட்டது. மேலும், மாதகாலப்பகுதியில் கொள்வனவுகளின் அளவு, மெதுவான வேகமாயினும் வீழ்ச்சியடைந்தது. மேலும், சக்தி தொடர்புபட்ட செலவுகளில் அதிகரிப்பிலிருந்து தோற்றம்பெறுகின்ற அழுத்தத்தினை பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அதேவேளை, வழங்குநர் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் சற்று நீட்சியடைந்தது.


| மாறி | செத். | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **44.3** | **50.0** | + | **வீழ்ச்சியிலிருந்து நடுநிலை** |
| புதிய கட்டளைகள் | 45.7 | 48.6 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 35.7 | 36.1 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 42.9 | 44.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 48.6 | 51.4 | + | குறுக்கமடைதலிலிருந்து நீட்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில்துறையில் எதிர்கால எதிர்பார்க்கையானது பிரதானமாக பொருளாதாரத்தில் படிப்படியான மீட்சி மற்றும் கருத்திட்ட பணியின் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக சாதகமாகக் காணப்படுகின்றது. எனினும், சக்தி தொடர்புபட்ட செலவுகளில் மேல்நோக்கிய போக்கு மற்றும் வரவிருக்கும் வரித்திருத்தங்களின் தாக்கம் என்பன பற்றி நிறுவனங்கள் கவலைகொண்டுள்ளன.

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதி 2023 ஒத்தோபர் 50.0**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்*[1]

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.

கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது

கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது

கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

*மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

**மொத்த நடவடிக்கை:** கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**தொழில்நிலை:** நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

**கொள்வனவுகளின் அளவு:** உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

**நிரம்பலர் விநியோக நேரம்:** கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு

ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

*அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.